

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.07.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கம் மற்றும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. அரசு செயலாளர் திருமதி க. லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த. ஆனந்த், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, தாட்கோ பொது மேலாளர் (திட்டம்) ந.சீனிவாசன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டெல்லி முதல்வர்

# அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின்!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

டெல்லி, ஜுலை 14-

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அடிப்படை விசாரணைக்காக மட்டுமே ஒருவரை கைது செய்ய முடியாது என்றும் உச்சநீதிமன்றம் பரபரப்பு கருத்து தெரிவித்துள்ளது.

மதுபான கொள்கை தொடர்பான வழக்கு விவகாரத்தில் இடைக்கால ஜாமின் கோரியும், அமலாக்கத்துறை கைது நடவடிக்கை சட்டவிரோதம் என்று அறிவிக்க வேண்டும் என்றும் கெஜ்ரிவால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கின் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கி நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான அமர்வு உத்தரவிட்டுள்ளது. அமலாக்கத்துறை கைது நடவடிக்கை குறித்து உயர் நீதிபதிகள் அமர்வு விசாரிக்க வேண்டும் என்று 2 நீதிபதிகள் அமர்வு பரிந்துரை செய்துள்ளது. கெஜ்ரிவால் கைது நடவடிக்கை சட்ட விதிகளின் கீழ் நடைபெற்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும், இது கவலை அளிப்பதாக உள்ளதாகவும் நீதிபதிகள் கூறினர். அமலாக்கத்துறை சட்டப்பிரிவு 19,45 ஆகியவை குறித்து விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டி உள்ளதால் மூன்று நீதிபதிகள் அமர்வு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற 2 நீதிபதிகள் அமர்வு பரிந்துரை செய்துள்ளது. மேலும், அடிப்படை விசாரணைக்காக மட்டுமே ஒருவரை கைது செய்ய முடியாது என்றும் உச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளது.



கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு வீட்டு வசதித் துறை நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சிங்காநல்லூர் உழவர் சந்தை அருகில் உள்ள, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்போர் சங்க நிர்வாகிகள், அப்பகுதியில் உள்ள 960 மிகவும் பழுதடைந்த வீடுகளை இடித்து விட்டு, புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவது பற்றி,ஆலோசனை செய்தார். இந்நிகழ்வில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கணபதி ராஜ்குமார் எம்பி,, பொள்ளாச்சி ஈஸ்வரசாமி எம்பி., சிங்காநல்லூர் வீட்டுவசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்போர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், ஜுலை 14-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரத்திற்குட்பட்ட மகாதேவப்பட்டினம் கிராம ஊராட்சி மற்றும் திருவாரூர் வட்டத்திற்குட்பட்ட புலிவலம் ஊராட்சியில் தொடக்க விழா, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் மன்னார்குடியில் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தலைமையிலும், திருவாரூரில் சட்ட மன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் தலைமையிலும் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ மாவட்ட வருவாய் அதிகாரி சண்முகசுந்தரம் , மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள 10 வட்டாரங்களில், மொத்தமாக 430 கிராம ஊராட்சிகள் உள்ளன. இத்திட்டத்தில் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளையும், உள்ளடக்கி 11.07.2024 முதல் 22.08.2024 வரை 13 நாட்களில் 53 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

முகாம்களில் மின்சார வாரியம், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை, சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாவட்ட தொழில்மையம், தொழிலாளர் நலத்துறை ஆகிய 15 துறைகளைச் சேர்ந்த 44 சேவைகளை பொதுமக்களுக்கு விரைவாக வழங்கிடும் பொருட்டு இத்திட்ட முகாம் நடத்தப்படுகிறது.

மேற்படி, முகாம்களில் பெறப்படும் மனுக்களை 30 நாட்களுக்குள் முடிவு செய்து, பொதுமக்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்முகாம்களில் பெறப்படும் கோரிக்கைகளில், இ-சேவை வாயிலாக விண்ணப்பிக்கும் மனுக்களுக்கு, உடனடியாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இம்முகாமிலேயே இ-சேவை மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதனைத்தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் இன்றைய தினம் பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

இம்முகாமில் மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேகர் கலியபெருமாள், நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பாரதி மோகன், இக்பால், சோபனா கணேசன் திட்டக்குழு உறுப்பினர் இரா. சங்கர், மகாதேவப்பட்டினம் ஊராட்சி மன்றத்தலைவர் மரகதம், புலிவலம் ஊராட்சி மன்ற தலைவர் காளிமுத்து, துணைத்தலைவர் மக்கள் கார்த்தி மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக பகுதிகளுக்கான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தர்மபுரி மாவட்டம் பாளையம் புதூர் ஊராட்சியில் தொடங்கி வைத்ததையடுத்து, நாகப்பட்டினம் மாவட்டம் ஆழியூர் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட சிறப்பு முகாமில் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்த பயனாளி ஒருவருக்கு உடனடி பட்டா மாறுதல் உத்தரவை தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவரும், நாகை மாவட்ட தி.மு.க. செயலாளருமான என். கௌதமன் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர். உமதிவாணன்அன்புள்ளம் கொண்ட பார்த்தார ஆத்மா குழு தலைவரும் நாகை வடக்கு ஒன்றிய கழக செயலாளருமான சிக்கல் என். ஆனந்த், நாகை ஒன்றிய குழு தலைவர் அனுசியா மற்றும் பலர் உள்ளனர்.

### ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சியில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம் தொடக்கம்!

## அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றார்!

ஈரோடு, ஜுலை 14-

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் குமாரவலசு ஊராட்சி வெள்ளோடு அண்ணமார் திருமண மண்டபத்தில் ‘மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமினை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று இரண்டாம் கட்டமாக தர்மபுரி மாவட்டம் பாளையம் புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஊரகப் பகுதிகளுக்கான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் குமாரவலசு ஊராட்சி வெள்ளோடு அண்ணமார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ‘மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை தொடங்கி வைத்து முகாமில் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு மாவட்ட தொழில் மையம் சார்பில் 4 பயனாளிகளுக்கு நீட் மற்றும் அண்ணல் அம்பேத்கார் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் ரூ.9.00 இலட்சம் ஒப்பளிப்பு மானியத்தினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று இரண்டாம் கட்டமாக தர்மபுரி மாவட்டம் பாளையம் புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஊரகப் பகுதிகளுக்கான ‘மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத்திட்டத்தினை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு அரசு துறைகள் அனைத்தும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பொதுமக்கள் மனுக்களை வழங்குகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்பே உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பேற்ற 100 தினங்களுக்குள் அம்மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

**9586 மனுக்கள் மீது தீர்வு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18.12.2023 அன்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதன்முதலாக கோயம்புத்தூர் மாவட்டம் எஸ்.என்.ஆர். கல்லூரியில் ‘மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகளில் மற்றும் ஈரோடு மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள கிராம பஞ்சாயத்துகளில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை ‘மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் 82 முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 13 துறைகள் பங்கேற்று மனுக்களைப் பெற்றார்கள். இதில் 13997 மனுக்கள் பெறப்பட்டது. இதில் 9586 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு பயன் பெற்றுள்ளனர். அதேபோல் மீதமுள்ள பகுதிகளிலும் இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் ஊரக பகுதிகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள்.

**30 தினங்களுக்குள் தீர்வு காணப்படும்!**

அந்த வகையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களுக் குட் பட்ட 214 கிராம ஊராட்சிகளுக்கு (11.7.2024) முதல் 14.09.2024 வரை 72 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. அந்தந்த ஊராட்சிகளில் இம்முகாம் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதில் 15 துறைகள் பங்கேற்று 44 வகையான சேவைகள் வழங்கப்படவுள்ளது. முகாமில் இச்சேவைகள் அல்லாது பெறப்படும் மனுக்கள் மீது முதல்வரின் முகவரி என்ற திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று பெறப்படும் மனுக்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு டோக்கன் வழங்கப்படுகிறது. இதனைத் கொண்டு தொடர்புடைய துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் பொழுது அங்கும் இம்மனு பதிவு செய்யப்படுகிறது. மேலும் அத்துறை சார்பாக பெறப்படும் மனுக்கள் மீது 30 தினங்களுக்குள் தீர்வு காண வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அப்பணிகள் மேற்கொள்ளப்படும். நம்முடைய மாவட்டத்தை பொறுத்த வரை இப்பணிகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல பெரிய திட்டங்களை வழங்கியுள்ளார்கள். அந்த வகையில் சோலார் பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் மூலம் அரசு பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு பள்ளியிலேயே வழங்கப்படுகிறது. இத்திட்டம் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் விரிவு படுத்தப்படவுள்ளது. நம்முடைய மாவட்டத்தில் 36 பள்ளிகளில் இத்திட்டம் செயல் படுத்தப்படவுள்ளது. வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இது போன்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

கலைஞர் மகளிர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 1.16 கோடி மகளிருக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. தற்பொழுது கூடுதலாக 1.40 இலட்சம் மகளிருக்கும் வழங்கப்படுகிறது. பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டணமில்லா பேருந்து பயண சலுகை வழங்கப்பட்டு வருகிறது. புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து மேற்படிப்பில் சேர்ந்த கல்லூரி மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000ஃ உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதேபோல் ஈரோடு மாவட்டத்தில் மிகப்பெரிய நூலகம் அமைக்கப்படவுள்ளது. எனவே மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமில் பெறப்படும் மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது தொடர்புடைய துறை அலுவலர்கள் மூலம் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு. நாகரத்தினம், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.நவமணி கந்தசாமி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.மனிஷ், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி. காயத்ரி இளங்கோ, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. சீனுவாசன்

ஜுலை 14 (2016)



இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

அச்சிறுப்பாக்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், பேரூர்ச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், அச்சிறுப்பாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய இயக்குநர் ஆகிய பதவிகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


### தமிழ்நாட்டிற்கு வருகை தந்த

# தைவான் ஜவுளிக்குழு அரசுத் துறை அலுவலர்களுடன் ஆலோசனை!

## கோவையில் தொழில்நுட்ப ஜவுளி நிறுவனங்களை பார்வையிட்டனர்!

சென்னை, ஜுலை 14-

ஜனவரி 2024ல் நடைபெற்ற உலக முதலீட்டாளர்களின் மாநாட்டினை தொடர்ந்து, தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளிகளின் அனைத்து பிரிவுகளின் வளர்ச்சிக்கான பெருமுயற்சிகள் முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு அங்கமாக, 10.07.2024 மற்றும் 11.07.2024 ஆகிய தேதிகளில் 10 பேர் அடங்கிய தைவான் நாட்டின் தொழில்நுட்ப ஜவுளி மற்றும் செயற்கைஇழை துறைசார்ந்த தொழில்முனைவோர் குழு தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்து, கோவையில் 10க்கும் மேற்பட்ட தொழில் நுட்ப ஜவுளி நிறுவனங்களை பார்வையிட்டு, தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளித்துறையுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்தாலோசித்தனர்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு பிரிவானது, தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளித் துறையில் முதலீட்டு சாத்தியக்கூறுகள் மற்றும் தொழில்நுட்ப இணைப்புகளை ஆராயும் நோக்கில் இந்த பயணத்திற்கு ஏற்பாடு செய்தது.

தைவான் ஜவுளித் துறையானது, சீனா மற்றும் தைவான் புவிசார் அரசியல் சூழ்நிலையின் காரணமாக, தமிழ்நாட்டினை ஒரு கவர்ச்சிகரமான மற்றும் மாற்று முதலீட்டுக்கான வாய்ப்பாக கருதுகிறது.

இப்பயணத்தின் தொடர்ச்சியாக, 12.07.2024 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை, MSME மற்றும் தொழில் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடும் பொருட்டு இப்பிரதிநிதிகள் குழு சென்னைக்கு வருகை தந்தது. தைவான் தூதுக்குழு வினருக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் இடையேயான கலந்துரையாடலை தமிழ்நாடு அரசு புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள நாமக்கல் கவிஞர் கட்டிடத்தில், மதிய உணவுடன் ஏற்பாடு செய்தது.

கூட்டத்தில், தைவான் ஜவுளிக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஜஸ்டின் ஹுவாங், தைவான் செயல்பாட்டு ஜவுளிகள் (FUNCTIONAL TEXTILES) மற்றும் விளையாட்டு ஜவுளிகளில் அதிக கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார். பின்னர், தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் நுட்ப ஜவுளித் துறையில் அரசின் சலுகைகள் குறித்து தைவான் பிரதிநிதிகளுக்கு தொழில் வழிகாட்டி முகமை விளக்கமளித்தது.

கூட்டத்தில் உரையாற்றிய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலர் திருமதி எஸ்.அர்ச்சனா பட்நாயக், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், மற்றும் தொழில் துறை செயலர் வி.அருண்ராய் ஆகியோர் தமிழ்நாடு அரசு முழுமையான தொழில் வளர்ச்சிக்கு போதிய ஆதரவினை நல்கும் என தைவானின் ஜவுளிக் குழுவிற்கு உறுதியளித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார் தொழில் துறை செயலர் வி.அருண்ராய், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார மையம் சென்னையின் இயக்குநர் ரிச்சர்டு சென் தைவான் ஜவுளிக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஜஸ்டின் ஹுவாங், இந்திய தொழில் கூட்டமைப்பு, தமிழ்நாடு மாநில கவுன்சில், தலைவர் ஸ்ரீவத்ஸ் ராம், கோபிகுமார் மற்றும் முனைவர்.வேல் கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.


## 11 வது ஆண்டு நினைவு நாள்



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்

(க/பெ. மறைந்த கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**

மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்